உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை

Monthly Journal of Sivapoomi

சிவம்~06 விசுவாசுவ வருடம் மார்கழித் திங்கள் மார்கழி ~2025 பூமி~12



# ஆடம்பரங்களை தவிர்த்து வாழ்வோம்

இயற்கையின் சீற்றத்தினால் எம் நாட்டில் எத்தனையோ குடும்பங்கள் உயிர்களை, வீடுகளை, சொத்துக்களை இழந்து க்'டப்படுகின்றனர். நாடு மீள முடியாத அளவுக்கு பொருளாதார பிரச்சனைகளை சந்தித்துள்ளது. இந்த சூழ்நிலையில் இயற்கை தெய்வங்களை வழிபாடு செய்வதோடு கோயில் திருவிழாக்கள் மற்றும் எங்கள் குடும்ப விழாக்களுக்கு ஆடம்பரமான அநியாயமான வீண் செலவுகளை நாம் தவிர்ப்பது நல்லது.

பழையன களைதலும் புதியன புகுதலும் என்ற சங்க மரபு உண்மைதான். புதிய புதிய கண்டுபிடிப்புகள் வருகின்ற போதெல்லாம் அதன் பயன்பாட்டிலே வீடுகளுக்கு வாங்கி பயன்படுத்துவது இயற்கை. அதை யாரும் மறுக்க முடியாது. அதேபோல் புதிய புதிய விஞ்ஞான பொருட்களை கோயில் வழிபாட்டிலும் சரி மற்ற ஏனைய வழிபாட்டிலும் சரி பயன்படுத்துவது சர்வசாதாரணமானது. ஆனால் கோயில் விழாக்களுக்கு இன்றைய சூழ்நிலையிலே யானை குதிரை கொண்டு வருவது, வான வேடிக்கை செய்வது, ஏட்டிக்கு போட்டியாக திருவிழாக்களிலே பணத்தை வீண் விரயங்கள் செய்வதை சமூகம் குறைத்துக் கொள்ள வேண்டும்.

காரணம் நமது அடுத்த தலைமுறைக்கு பணத்தின் உடைய பெறுமதி உழைப்பின் உடைய பெறுமதி நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த பாடுபடுகின்ற ஒரு உழைப்பாளியின் உடைய பெறுமதி எல்லாமே புரிய வேண்டும். வளர்ந்த நாடுகளாக கருதப்படுகின்ற ஜப்பான்,சீனா, இந்தியா போன்ற நாடுகள் அடிப்படையிலேயே கடின முயற்சிகள் செய்கிறார்கள். பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்கும் வாழ்வாங்கு வாழ்வதற்கும் அங்கே அரும்பாடுபட்டு உழைக்கிறார்கள். குறிப்பாக எங்களுடைய நாட்டிலே எங்களுடைய மண்ணிலே பல இளைஞர்கள் எவ்விதமான தொழில் முயற்சியமின்றி வீண் பொழுது போக்குகின்றார்கள். காலத்தை வீண்ணாக்குகின்றார்கள். எனவே கடினமான உழைப்பாளிகளாக எங்களுடைய சமுதாயத்தை நாங்கள் மாற்ற வேண்டும். பணத்தினுடைய பெறுமதியை நம் சமூகம் உணர்வதற்கு சமய நிறுவனங்கள் கோயில் அறங்காவலர்கள் பள்ளித்தலங்கள் அத்தனையிலும் வீண் விரயத்தை தவிர்ப்பதற்கான நல்ல நெறி முறைகளை எம் சமூகத்திற்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு முன்மாதிரியாக நாம் நடந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

எல்லோரும் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்க வேண்டும். கோயில்களுக்குரிய நிலங்களை கூட உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும். வெற்று நிலங்களாக இருந்து பிறருக்கும் பயனில்லாமல் இருப்பதை விட வாழ்வுக்கு ஆதாரம் இல்லாமல் நிலம் இல்லாமல் வீடமைக்க வழி இல்லாமல் இருப்பவர்களுக்கெல்லாம் சமய சமூக நிறுவனங்கள் வெற்று நிலங்களை வழங்கி அவர்களையும் வாழ்விக்க வேண்டும். அதுதான் காலத்தின் கட்டாயம்.

மலையகத்தில் ஏற்பட்டிருக்கின்ற துன்பம் எங்கள் எல்லோருக்கும் ஓர் படிப்பினை. பாவம் அந்த மக்கள். 200 வருடங்களுக்கு மேலாக ஒரு குழி நிலம் கூட சொந்தமில்லாமல் தங்களுடைய இரத்தத்தை இந்த நாட்டின் உடைய விருத்திக்காக கொடுத்து பணியாற்றி, இன்று வெறும் கையோடு நிற்கின்றார்கள். எனவே நாம் வாழும் நாட்டிலே நிலம் இல்லாமல் வளம் இல்லாமல் வாழ்வதற்கு வழி இல்லாமல் இருப்பதற்கு இருப்பிடம் இல்லாமல் அலைகின்ற ஒரு சமுதாயத்தை நாம் காண்கிறோம். இவற்றையெல்லாம் உணர்ந்து எமது சமுதாயம் நல்ல முறையிலே திட்டமிட்டு எதிர்கால சந்ததியை ஒரு சுறுசுறுப்பான சமுதாயமாக மாற்ற ஆத்மீக வழியில் அனைவரும் முன்னுதாரணமாக செயல்பட வேண்டும். இந்த உயரிய நோக்கத்தை நோக்கி செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.



கலாநிதி செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்

# வெளிநாட்டில் இருந்து வந்து எமது மண்ணில் சேவையாற்றிய அமரர் லேடி இராமநாதன் அம்மையாருக்கு உருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது




யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியின் வளர்ச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக, கல்லூரியின் முன்னாள் அதிபரும் மேலாளருமான லேடி லீலாவதி இராமநாதன் அவர்களின் உருவச்சிலை திறப்பு விழா 18-12-2025 வியாழக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். கல்லூரியின் பழைய மாணவனும், அகில இலங்கை இந்து மாமன்றத் துணைத் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்துகொண்டு உருவச்சிலையைத் திறந்து வைத்து நினைவுப் பேருரையையும் நிகழ்த்தினார்.




இலங்கையின் கடந்த நூற்றாண்டு கால வரலாற்றில் தமிழர்கள் பெருமையுடன் தெரிந்து வைத்திருக்க வேண்டிய விடயங்கள் பலவற்றை இந்த நாற்பது நிமிட பேச்சில் அறிந்து கொள்ள முடியும். இவ்வளவு விடயங்களையும் வாசித்து, ஆராய்ந்து, நினைவில் வைத்து பேச ஈழத்தில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் இருப்பது தவப் பயன்.

எங்கள் வரலாற்றையும் பெருமைகளையும் இயன்றவரை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் மிகப்பெரிய பணியை தொடர்ச்சியாக செய்துவரும் ஐயா அவர்களுக்கு நீண்ட ஆயுளை ஆண்டவன் அளிக்க அனைவரும் பிரார்த்திப்போம்.

இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இராமநாதன் தம்பதிகள் வசித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லத்திற்கு முன்பாக இந்த உருவச்சிலை நிறுவப்பட்டது. கல்லூரியின் பழைய மாணவிகளின் மிகுந்த முயற்சியினாலும், பங்களிப்பினாலும் லேடி இராமநாதன் அவர்களின் அரும்பணிகளுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் இந்தச் சிலை உருவாக்கப்பட்டிருந்தது.

1909ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை இராமநாதன் கல்லூரி வளாகத்திலேயே தங்கியிருந்து, இராமநாதன் கல்லூ ரி, பரமேஸ்வராக் கல்லூரி மற்றும் இராமநாதன் சைவப் பெண் ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் மேலாளராகவும், அதிபராகவும் லேடி இராமநாதன் அரும்பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் சைவ மங்கையர் கழகத்தின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் இருந்து அவர் ஆற்றிய கல்வி மற்றும் சமூகப் பணிகள் இவ்விழாவில் நன்றியுடன் நினைவு கூறப்பட்டன.

இவ்விழாவின் மற்றுமொரு சிறப்பம்சமாக, கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் பதிப்பாசிரியத்துவத்தில் உருவான ”கர்மயோகி லேடி இராமநாதன்” எனும் சிறப்பு மலரும் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டது அமரர்கள் லீலாவதி இராமநாதன் மற்றும் சேர் பொன் இராமநாதன் ஆகியோர் இந்த மண்ணில் மக்களுக்காக ஆற்றிய பணிகளை நன்றியோடு நினைவு கூற வேண்டிய நேரம் இது.



# ஆத்ம சாந்தி பிரார்த்தனை



83 வயதான தமிழறிஞரும் கணினி வல்லுநருமான திரு. க. சிவகுருநாதபிள்ளை ஐயா, கம்போடியாவில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க “கடாரம் கொண்டான் இராசேந்திர சோழன் மாநாட்டில்“ கலந்துகொண்டிருந்த வேளையில், திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் காலமான செய்தி கேட்டு தமிழ்ச் சமூகம் ஆழ்ந்த துயரில் மூழ்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் கட்டைப்பிராயைத் தனது பிறப்பிடமாகக் கொண்டவர் சிவாப்பிள்ளை ஐயா. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி போன்ற புகழ்பெற்ற பாடசாலைகளின் பழைய மாணவரான இவர், பொறியியல் மற்றும் கணினித் துறையில் வல்லுநராகத் திகழ்ந்தபோதும், அவர் தம் வேர்களை மறக்கவில்லை. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் அவர் கொண்டிருந்த ஆற்றல், அவர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டுகளால் மேலும் மெருகூட்டப்பட்டது.

லண்டனில் குடியேறிய பின்னர், மேற்குலகின் நடுவே தமிழ் மொழியின் மரபும், சைவத்தின் அறமும் குன்றாமல் நிலைபெற வேண்டும் என்பதில் அவர் மிகுந்த அக்கறை செலுத்தினார். கணினித் துறையில் அவரது ஆழ்ந்த அறிவு, சைவம் குறித்த ஆய்வுகளுக்கும், தமிழ்ப் பண்பாட்டை உலகெங்கும் கொண்டு செல்வதற்கும் பெரும் துணையாக இருந்தது. லண்டனில் தமிழ் மொழியையும், சைவ சித்தாந்தத்தையும் வளர்ப்பதற்காக அவர் ஆற்றிய தன்னலமற்ற தொண்டுகள் மறக்க முடியாதவை. அவர் ஓர் எளிய தொண்டராக மட்டுமன்றி, பல தமிழ் மற்றும் சைவ அமைப்புகளுக்கு வழிகாட்டியாகவும், தூணாகவும் விளங்கினார்.

தன்னுடைய முதிர்ந்த வயதிலும், தமிழரின் வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டக் கூடிய மாநாட்டில் பங்கேற்பதற்காகக் கம்போடியாவுக்குப் பயணித்த அவர், அங்கேயே தமது உயிரைத்

துறந்தது, அவர் தமிழுக்கும், வரலாற்று ஆய்வுக்கும் அளித்த மரியாதையின் உச்சபட்ச அடையாளமாகக் கருதப்படுகிறது. அவர் ஓய்வை நாடாமல், இறுதிவரை அறிவார்ந்த தேடலில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட ஒரு நிஜமான தமிழறிஞர். கணினி வல்லுநராக, பொறியியல் வித்தகராக, ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக சைவத்தையும் தமிழையும் நேசித்த ஒரு தொண்டராக வாழ்ந்த திரு. க. சிவகுருநாதபிள்ளை ஐயாவின் மறைவு, ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். சிவாப்பிள்ளை ஐயாவின் ஆன்மா சாந்தியடையவும், அவர் ஆற்றிய தொண்டுகள் உலகெங்கும் நிலைத்திருக்கவும், இறைவன் திருவருளை வேண்டி நாம் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## யாழ்.மாணவி தங்க விருது பெற்று சாதனை!







தேசிய ரீதியில் நடைபெற்ற இளம் விவசாய விஞ்ஞானி போட்டியில், வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யாழ்.குட்டியப்புலம் அ.த.க பாடசாலையில் தரம் 09ல் கல்வி கற்கும் செல்வி கருணா நதீனா என்ற மாணவி தங்க விருதினைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்.மண்ணுக்கும், பாடசாலை சமூகத்துக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்த குறித்த மாணவியை பலரும் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிவபூமி அறக்கட்டளையின் வெள்ள அனர்த்த நிவாரணப் பணிகள்

வடக்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளார். இந்த உதவிகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைந்துள்ளன.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் உதவி




முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, சிவபூமி அறக்கட்டளை சார்பில் 500 படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவிகளை அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் 01.12.2025 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து, மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. உமாமகேஸ்வரனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். இந்த நிவாரணப் பொருட்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிளிநொச்சி மாவட்டத்தில் நிவாரணம்

அதேபோல, கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் சிவபூமி அறக்கட்டளை உதவிகளை வழங்கியுள்ளது. 30.12.2025 அன்று, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்கள் கையளிக்கப்பட்டன. இந்த நிவாரணப் பொருட்களும் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மற்றும் உடைமைகளை இழந்த குடும்பங்களுக்கு அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும்.

## யாழ் மாவட்டத்தில் உணவு வழங்கல்



யாழ் மாவட்டத்திலும் வெள்ள அனர்த்தத்தின் தாக்கம் உணரப்பட்டது. யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, சிவபூமி அறக்கட்டளை சார்பில் உணவு வழங்கல் சேவை மேற்கொள்ளப்பட்டது. அனர்த்தத்தின் காரணமாக உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கிய மக்களுக்கு இது உடனடி நிவாரணமாக அமைந்தது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் இந்த மனிதாபிமான செயற்பாடு, அனர்த்த காலங்களில் மக்களுக்கு உதவுவதில் தன்னார்வ நிறுவனங்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. இந்த உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்புப் பணிகளுக்கு வலிமை சேர்ப்பதோடு, சமூக நல்லிணக்கத்தையும் வலியுறுத்துகின்றது.







# 2025 இல் இரு கலாநிதிப் பட்டங்கள் பெறும் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் பத்மநாதன்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் வேந்தரும், பேராதனைப் பல்கலைக்கழகத் தகைசார் வரலாற்றுப் பேராசிரியருமான சிவசுப்பிரமணியம் பத்மநாதன் அவர்களுக்கு பேராதனைப் பல்கலைக் கழகம் 24.07.2025 அன்று, 86ஆவது பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப் பட்டம் (Doctor of Letters) வழங்கிச் சிறப்பித்தது.

அதேவேளை வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம் 04.10.2025 அன்று நடைபெற்ற 29 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் பத்மநாதன் அவர்களுக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் (Doctor of Literature) பட்டம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத் தக்கது.



# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூஜை



நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும், தமிழ் மொழி செழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார்.

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் ஆகிய இருவருக்கும் புதல்வனாக 1822ம் ஆண்டு அவதரித்தார்.

இலங்கையும், இந்தியாவும் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த போது சைவமும், தமிழும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கிய காலப்பகுதியிலே தோன்றியவர் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும், ஈழம் வாழ் மக்களின் பெரும்பாலானோரது உள்ளத்துள் ஒளி விளக்காய் சுடர்விட்டிலங்குவதுமான சைவசமயம் அந்நியரது செல்வாக்கு வலிவுற்றிருந்த காலத்தில் சிறிது நலிவுற்றிருந்தது.

இலங்கைக்கு வர்த்தக நோக்கோடு வந்த அந்நிய ஆட்சியாளர் அரசியலாதிக்கத்தைக் கைப்பற்றவும் தற்சமயம் கொள்கையை பரப்பவும் எண்ணங்கொண்டு கல்வி வழிப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர்.

அந்நியவெற்று நாகரீகப் போக்கில் ஈடுபாடு கொண்ட மக்கள் சுயசமய கலாசார வழிகளை மறந்து வாழ்வாராயினர்.

இவ்வாறு சைவ சமயம் நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக்கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காக தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார்.



அவரின் கல்விப் புலமையையும், நாவன்மையையும், சைவத்தமிழ் பணிகளையும் பாராட்டி திருவாடுதுறை ஆதீனம் அவருக்கு ‘நாவலர்’ என்ற பட்டத்தை வழங்கியது.

சைவம் காத்த நாவலர் பெருமானை சைவமக்கள் ஐந்தாம் சமயக்குரவர் எனப் போற்றுகின்றனர். சிவ சமயத்தை அழிய விடாது பாதுகாக்க நாவலர் பல முயற்சிகளை மேற்கொண்டார். சைவ சமயத்தவர் ஒரு சிலரிடம் காணப்பட்ட தவறான பழக்க வழக்கங்கள், செயல்கள் என்பவற்றை நீக்க முயன்றார். சைவப் பாடசாலைகளை நிறுவினார். திருக்கேதீஸ்வரம், கீரிமலைச் சிவன் கோயில் என்பனவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு வழிவகுக்குமாறு சைவ மக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார்.

தம் வாழ்நாள் பூராவும் தமிழுக்கும் சைவத்துக்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் 1879ம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறைபதம் அடைந்தார்.

சிவபூமியில் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திருவுருவச்சிலை சிவபூமி அறக்கட்டளை ஊடாக அன்பளிப்பு செய்யப்பட்டு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் Aaruthirumurugan அவர்களால் (14.04.2023) அன்று திறந்து வைக்கப்பட்டது. (கீரிமலையில் அமைக்கப்பட்டது)

**ஆக்கம் – மு.பாபுஜி**

# ஈடு இணையற்ற ஆசிரியப் பெருந்தகை திரு. இ. மகாதேவா (தேவன்) அவர்களின் நினைவஞ்சலி



யாழ்ப்பாணத்தின் கலை, கல்வி, இலக்கிய உலகில் ஓர் அசைக்க முடியாத ஆலமரமாய் திகழ்ந்த திரு. இ. மகாதேவா (தேவன்) அவர்களின் 44 ஆவது ஆண்டு நினைவஞ்சலி இந்த மாதம் 07.12.2025 அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகப் பணிபுரிந்த தேவன் ஐயா, வெறும் பாடப்புத்தக அறிவைக் கடந்து, மாணவர்களுக்கு வாழ்வியல் விழுமியங்களையும் தமிழ் உணர்வையும் ஊட்டியவர். அவரது கல்விப் பணியானது நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்தபோதும், அவரிடம் பயன்பெற்ற மாணவர்கள் இன்றும் அவரை நன்றியோடு நினைவு கூர்கின்றனர். இந்தக் கால இடைவெளி கடந்தும் மாணவர்கள் காட்டும் இந்த நன்றியுணர்வு, அவரது போதனை முறையின் தாக்கத்தையும், அவர் மாணவர்களின் மீது கொண்டிருந்த அன்புப் பிணைப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

அவர் வெறும் ஆசிரியராக மட்டும் தன்னைச் சுருக்கிக்கொள்ளவில்லை. அவரைப் பற்றிச் சொல்லப் புகுந்தால், அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், உணர்ச்சிமிக்க பேச்சாளர், தரமான நாடக நெறியாளர், மொழியாளுமை மிக்க மொழிபெயர்ப்பாளர், கச்சிதமான அறிவிப்பாளர் எனப் பன்முக ஆற்றல்களை அடுக்கிச் சென்றுகொண்டே இருக்கலாம்.

அவரது ஆற்றல்களைக் கண்டு வியந்தவர்கள் பலர். குறிப்பாக, சைவமும் தமிழும் தழைத்தோங்கிய யாழ் மண்ணில் கம்பன் கழகத்தின் காவலராக அவர் ஆற்றிய பணி ஈடு இணையற்றது. கம்ப இராமாயணத்தின் அழகியலை பொதுமக்களுக்கு இலகுவாக எடுத்துரைப்பதில் அவரது பங்களிப்பு மகத்தானது.

தேவன் ஐயா அவர்கள் உடல் நீத்திருக்கலாம், ஆனால் அவர் கல்வி, கலை, தமிழ் மீது கொண்ட அசைக்க முடியாத பற்று மூலம் அவர் விட்டுச் சென்ற அறிவொளியும், சமூகத்திற்கு அவர் வழங்கிய அழியாப் பங்களிப்பும் நீடித்து நிலைத்திருக்கும். விழாக்களும் கொண்டாட்டங்களும் இல்லாமல் போனாலும், அவரது நினைவுகள் யாழ்ப்பாணத்தின் கலாச்சாரப் பரப்பில் ஆழமாக வேரூன்றி நிற்கின்றன.

## இதய அஞ்சலி



யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கின் கல்வி, சமயம் மற்றும் சமூகப் பணிகளில் ஆழமான பங்களிப்பை வழங்கியவரும், வைத்திய நிபுணருமான கனகசிங்கம் தர்மசீலன் அவர்கள் லண்டனில் காலமான செய்தி, கோண்டாவில் வாழ் மக்கள் மத்தியிலும் அவர் சார்ந்த வட்டாரங்களிலும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோண்டாவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த இவர், மருத்துவத் துறையில் ஆற்றிய அரும்பணி தவிர, கோண்டாவில் பொற்பதி வீதி காளி கோவில் தர்மகர்த்தாவாகவும், சிறந்த சமய மற்றும் சமூகத் தொண்டராகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். அவரது மறைவு, கோண்டாவிலுக்கு ஒரு பேரிழப்பாகும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

மருத்துவப் பணியைத் தாண்டி, சமூகத்தின் தேவைகளை உணர்ந்து பல தர்ம காரியங்களை முன்னின்று நடத்திய திரு. தர்மசீலன் அவர்கள், இறுதி வரை பிரமச்சரிய விரதத்துடன் வாழ்ந்து, தன்னலமற்ற சேவையின் மூலம் பலருக்கும் உதவிய பண்பாளராகத் திகழ்ந்தார். அவரது சேவை மனப்பான்மை, தூய்மையான வாழ்க்கை முறை மற்றும் எளிமையான குணம் என்பன பலருக்கும் முன்மாதிரியாக இருந்தது.

மருத்துவ உலகில் நிபுணராகவும், ஆன்மீக உலகில் தர்மகர்த்தாவாகவும், சமூகப் பணியில் ஒரு பண்பாளராகவும் திகழ்ந்த வைத்திய நிபுணர் கனகசிங்கம் தர்மசீலன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய சிவபூமி அறக்கட்டளையினர் பிரார்த்திக்கின்றனர். ஓம் சாந்தி.

# சிவபூமி அறக்கட்டளை மூலம் முல்லைத்தீவுக்கு மனிதாபிமான உதவி




முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட இடர்ச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்கும் நோக்குடன், சிவபூமி அறக்கட்டளை ஊடாக லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளை மனிதாபிமான உதவிகளை வழங்கியது. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்கள், டிசம்பர் 06, 2025 அன்று முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த நிவாரணப் பொருட்களை சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. ஆறு திருமுருகன் அவர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களிடம் நேரில் வழங்கி வைத்தார். லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட இந்த அத்தியாவசியப் பொருட்கள், இடரினால் அவதியுறும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பேருதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட அரச அதிபர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்கள், இக்கட்டான சூழ்நிலையில் லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையும் சிவபூமி அறக்கட்டளையும் இணைந்து வழங்கிய இந்தத் துரித உதவிக்குத் தனது ஆழமான நன்றியைத் தெரிவித்தார். இந்தப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களிடம் எவ்விதத் தாமதமும் இன்றிச் சென்றடைவதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்யும் எனவும் அவர் குறிப்பிட்டார்



# வடமாகாணத்தில் முதலிடம் பெற்ற கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக்கு கௌரவம் அளிக்கப்பட்டது




கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையானது 2025 ஆம் ஆண்டுக்கான வடமாகாணத்தில் சிறந்த மாற்று வலுவுடைய சிறார்களுக்கான பாடசாலைக்கான தெரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இப்பாடசாலையின் தன்னலமற்ற சேவையையும், மாற்றுத்திறன் கொண்ட சிறார்களின் வளர்ச்சிக்கு அது அளித்த முக்கிய பங்களிப்பையும் இந்த அங்கீகாரம் உறுதிப்படுத்தியது.

இவர்களுக்கான விருது வழங்கும் விழா, உலகெங்கிலும் மாற்றுத்திறன் கொண்டவர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை வலியுறுத்தும் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு நடைபெற்றது. வடமாகாண சமூகசேவைகள் திணைக்களகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, டிசம்பர் 12, 2025 அன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சிறப்புமிக்க விழாவில், பாடசாலையின் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள், நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்களின் முயற்சிகளைப் பாராட்டி, வடமாகாண சமூகசேவைகள் திணைக்களகத்தால் விருது வழங்கப்பட்டது. மாற்றுத்திறன் கொண்ட சிறார்களுக்கு தரமான கல்வியையும், பாதுகாப்பான சூழலையும், சமூகத்தில் முழுமையாக இணைந்து கொள்வதற்கான திறன்களையும் வழங்குவதில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை கொண்டிருந்த தொடர்ச்சியான உறுதிப்பாட்டுக்கு இந்த வெற்றி கிடைத்தது. இந்த விருது, மாகாணத்தில் உள்ள ஏனைய சிறப்புப் பாடசாலைகளுக்கும் ஒரு உத்வேகமாக அமைந்தது.






# வடக்கில் மலையக தமிழ் உறவுகளை குடியமர்த்த அழைப்பு விடுத்தார் கலாநிதி ஆறு. திருமுருகன்




மலையக தமிழ் மக்களை இனியும் ஆபத்தான மலை விளிம்புகளில் இருக்காமல் வடக்கிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார் சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்

நல்லைநகர் ஆறுமுகநாவலரின் குருபூஜை 10.12.2025 நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது உரையாற்றிய ஆறு திருமுருகன் அவர்கள்

மலையக தமிழ் மக்களிடம் நாங்கள் நிலம் தருகிறோம். நீங்கள் வடக்கில் வந்து குடியேறுங்கள், வடக்கில் எவ்வளோ பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது. வடக்கில் எவ்வளவோ நிலம் இருக்கு என்று அவர்களை நாம் கூப்பிட வேண்டும் இதுவே மனித நேயம், இதுவே தர்மமாகும்.

மலையகத்திலிருந்து தமிழ் மக்கள் யாராவது வடக்கில் குடியேற வந்தால், எல்லா கோயில் காணிகளிலும், எல்லா சிதம்பரத்து காணிகளிலும், எல்லா தர்ம காணிகளிலும் அவர்களை குடியேற்றி அவர்களை காப்பாற்ற வேண்டும். அதற்கு எங்களை நாம் தயாராக்க வேண்டும். இதற்கு எம்மை போன்றவர்கள் பூரண ஒத்துழைப்பு கொடுக்க தயாராக இருக்கின்றோம். அவர்கள் இங்கு வந்தால் விவசாயத்தில் செழிப்பு வரும் என்று குறிப்பிட்டார்.

# கொழும்பு சிவபூமி நிலையத்தில் கார்த்திகை பௌர்ணமி வழிபாடு சிறப்பாக நடைபெற்றது



கொழும்பில் அமைந்துள்ள சிவபூமி அறக்கட்டளையின் சிவபூமி நிலையத்தில், கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சைவ சமயத்தவர்களுக்கு மிகவும் புனிதமானதாகக் கருதப்படும் கார்த்திகை பௌர்ணமி தின வழிபாடுகளில், கொழும்பில் வசிக்கும் சைவ மக்கள் கலந்துகொண்டு சிவபூமி நிலையத்தை நிறைத்திருந்தனர்.

சிவபூமி அறக்கட்டளையானது ஆன்மீக மற்றும் சமூக சேவைகளை மேற்கொண்டு வரும் நிலையில், மாதந்தோறும் நிகழும் பௌர்ணமி வழிபாடுகளை முறையாக நடத்தி வருகிறது. அந்த வகையில், கார்த்திகை பௌர்ணமி தினமான அன்று, விசேட அபிஷேக ஆராதனைகள் மற்றும் பக்திப் பாடல்களுடன் கூடிய வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த வழிபாட்டில் கலந்துகொண்ட கொழும்பு வாழ் சைவப் பக்தர்கள், பக்திப் பரவசத்துடன் பூஜைகளிலும், பாராயணங்களிலும் பங்கேற்றனர். இவ்வாறான வழிபாடுகள், நகர்ப்புறச் சூழலில் வசிக்கும் மக்களுக்கு ஆன்மீக அமைதியையும், சமய நம்பிக்கைகளையும் பேணிப் பாதுகாப்பதற்கான ஓர் உந்துசக்தியாக அமைகின்றன.

கார்த்திகை பௌர்ணமியை ஒட்டிச் சிவபூமி நிலையத்தில் இடம்பெற்ற இந்தச் சிறப்பான வழிபாடுகள், பக்தர்கள் மன நிறைவுடன் இறை அருளைப் பெற்றுச் செல்ல ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்ததோடு, கொழும்பு வாழ் மக்கள் மத்தியில் சைவ ஒற்றுமையையும் ஆன்மீக உணர்வையும் மேலும் வலுப்படுத்தியது.



# சிவபூமி அறக்கட்டளை மூலம் மன்னார் மாவட்டத்திற்கு இடர் நிவாரண உதவி



மன்னார் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கில், சிவபூமி அறக்கட்டளை ஊடாக லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்புடன் கூடிய அனர்த்த நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த மனிதாபிமான உதவிப் பொருட்கள் டிசம்பர் 04, 2025 அன்று உத்தியோகபூர்வமாக மன்னார் மாவட்ட நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. ஆறு திருமுருகன் அவர்கள், மன்னார் மாவட்ட அரச அதிபர் திரு. மு. கனகேஸ்வரன் அவர்களிடம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்கி வைத்தார்.

லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையின் தாராள மனப்பான்மையுடன் கூடிய நிதியுதவியின் மூலம் பெறப்பட்ட இந்த அத்தியாவசிய நிவாரணப் பொருட்கள், இடரினால் அவதியுறும் மன்னார் மாவட்ட மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொண்ட மாவட்ட அரச அதிபர் திரு. மு. கனகேஸ்வரன் அவர்கள், இக்கட்டான சூழலில் சிவபூமி அறக்கட்டளையும் லண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையும் இணைந்து துரிதமாக வழங்கிய இந்த உதவிக்குத் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார். இந்த உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை விரைவில் சென்றடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட செயலகம் எடுக்கும் என்று அவர் உறுதியளித்தார்.



# ஏகலைவனின் குரு தட்சணை



ஏகலைவன், அடர்ந்த வனங்களில் வாழும் நிஷாத (வேடர்) இனத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன். அவன் நிஷாதத் தலைவன் ஹிரண்யதனுவின் மகன். சிறுவயதிலிருந்தே வேட்டையிலும், அம்பெய்வதிலும் கொண்டிருந்த ஆர்வம் அவனைப் சிறுவயதிலேயே ஒரு சிறந்த வில்லாளியாக ஆக்கியது. அஸ்தினாபுரத்து இளவரசர் களுக்குக் கற்றுக்கொடுக்கும் பிரம்மாண்டமான வில்லாசிரியர் துரோணாச்சாரியரின் புகழ் அவனது காதுகளை எட்டியபோது, ஏகலைவனின் ஒரே இலட்சியம், அவரைத் தன் குருவாக ஏற்றுக்கொள்வதே. உலகின் தலைசிறந்த ஆசிரியரிடம் பாடம் கற்க வேண்டும் என்ற பெருங்கனவுடன், ஏகலைவன் ஒரு நாள் அரண்மனைக்கு அருகிலிருந்த பயிற்சித் திடலுக்கு வந்தான்.

துரோணாச்சாரியரின் கால்களில் விழுந்து வணங்கி, "குருதேவா, நான் ஒரு நி'ாதன். ஆனால், வில்வித்தையில் சிறந்து விளங்க வேண்டும் என்பதே என் ஆசை. தாங்கள் எனக்குக் கல்வி அளித்து, என்னை உங்கள் சீடனாக ஏற்க வேண்டும்," என்று கைகூப்பி நின்றான். துரோணரின் மனதில் ஒரு பெரும் தர்மசங்கடம் எழுந்தது. ஒருபுறம், ஏகலைவனின் ஆர்வம் மற்றும் பணிவு ஆகியவற்றைக் கண்ட அவர் மனம் நெகிழ்ந்தது. மறுபுறம், துரோணர் தனது பிரிய சீடனான அர்ஜுனனுக்கு "உன்னைவிடச் சிறந்த வில்லாளி இந்த உலகில் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்," என்று ஏற்கெனவே வாக்களித்திருந்தார்.

மேலும், சமூகப் படிநிலையின்படி, அரச குடும்பத்தினருக்குக் கற்றுக்கொடுக்கும் தன்னால், ஒரு வேட இனத்தைச் சேர்ந்தவனுக்குப் பயிற்சி அளிக்க முடியாது என்ற சமூக நியதியும் இருந்தது. இதனால், துரோணர் வருத்தத்துடன், "மகனே, நான் ராஜ குரு. என் சீடர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். உனக்கு நான் கற்றுக்கொடுக்க இயலாது," என்று மறுத்தார்.

ஏகலைவனின் மனது உடைந்தது, ஆனால் அவனது நம்பிக்கை உடைந்துவிடவில்லை. குருவின் மறுப்பு ஏகலைவனைப் புறமுதுகுகாட்டச் செய்யவில்லை. அவன், ”குருவே நேரில் மறுத்தாலும், என் மனதில் நீங்கள் என்றென்றும் குருவே,” என்று உறுதிகொண்டான்.

அவன் அங்கிருந்து கிளம்பி, அடர்ந்த வனத்துக்குள் சென்று, துரோணாச்சாரியரின் உருவத்தை மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் மண்ணால் பிடித்து, அதைத் தன் பயிற்சித் திடலில் பிரதிஷ்டை செய்தான். அந்தச் சிலையின் பாதங்களில் தினமும் மலரிட்டு வணங்கி, தன்னை ஒரு உண்மையான சீடனாக அர்ப்பணித்துக்கொண்டான். அந்த மண் சிலை தன்னைக் கவனிப்பதாகவும், தன்னுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவதாகவும் ஏகலைவன் மனப்பூர்வமாக நம்பினான்.

எந்த ஆசிரியரின் துணையும் இல்லாமல், அவன் தன்னுடைய முழு சக்தியையும், கவனத்தையும், குருவின் மீதான பக்தியையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு பயிற்சி செய்தான். நாள் ஆக ஆக, அவன் கைகள் அம்புகளை விடுவதில் ஒரு தெய்வீகத் திறமையைப் பெற்றன. அவனது வில்வித்தை, அர்ஜுனனின் நுட்பங்களைவிடவும் சில சமயங்களில் வேகமாக, துல்லியமாக இருந்தது.

இப்படியிருக்கையில், ஒரு நாள், பாண்டவர்களும் கௌரவர்களும் தங்கள் குரு துரோணருடன் வேட்டையாடச் சென்றனர். அப்போது, அவர்களுடன் வந்த ஒரு நாய் திடீரெனக் குரைத்து சத்தம் எழுப்பியது. அடுத்த நொடி, ”உச்” என்ற சிறிய ஓசையுடன், ஏழெட்டு அம்புகள் இடைவிடாமல் அந்த நாயின் வாய்க்குள் பாய்ந்து, அதன் குரைக்கும் சத்தத்தை நிறுத்தாமல், ஆனால் நாய் காயப்படாமல் அதன் வாயை அடைத்திருந்தன.

இந்த அபாரமான நுட்பத்தைக் கண்ட இளவரசர்கள், குறிப்பாகத் தன்னையே உலகின் சிறந்த வில்லாளியாகக் கருதிய அர்ஜுனன், பெரும் அதிர்ச்சிக்குள்ளானான். ”குருவே, இது சாத்தியமா? நம்மைத் தவிர வேறு எவரும் இவ்வளவு நுட்பமாக அம்பு எய்திருக்க முடியுமா?” என்று அர்ஜுனன் கேள்வியெழுப்ப, துரோணரின் மனம் பதட்டமடைந்தது. தன் வாக்குறுதிக்கு ஆபத்து வந்துவிட்டதை அவர் உணர்ந்தார்.

துரோணர் இளவரசர்களை அந்த நாயின் வாயில் அம்புகள் பாய்ந்த திசையை நோக்கி அழைத்துச் சென்றார். அங்கே, அந்த வேடக் குல இளைஞன், குருவின் மண் சிலைக்கு முன் அமர்ந்து, தன் அம்புகளைச் செதுக்கிக் கொண்டிருந்தான். அவர்கள் வருவதைக் கண்ட ஏகலைவன் எழுந்து, கைகளைச் சிரத்தையுடன் கூப்பி, "குருதேவா!" என்று வணங்கினான்.

துரோணர் அவனை உற்றுப்பார்த்து, "நான் உனக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. நீ எப்படி என்னை உன் குருவாகச் சொல்லிக்கொள்ள முடியும்?" என்று கேட்டார். ஏகலைவன் தான் மண்ணால் சிலை செய்து பயிற்சி செய்த முழு விவரத்தையும் விளக்கினான். அவனது அசைக்க முடியாத பக்தி, துரோணரைக் கண்கலங்கச் செய்தது. ஆனால், அர்ஜுனனுக்குக் கொடுத்த வாக்குறுதி அவரைப் பின்வாங்க விடவில்லை. அவர் திடீரென, "நீ என்னை உன் குருவாக ஏற்றால், உன்னுடைய குருதட்சிணையைக் கொடுக்க வேண்டும்!" என்று கடுமையான குரலில் கேட்டார்.

மகிழ்ச்சியில் திளைத்த ஏகலைவன், "சந்தேகமே வேண்டாம்! என் உயிரைக் கேட்டாலும் தருவேன், குருவே!" என்று பதிலளித்தான். துரோணர் உறுதியுடன், "உன்னுடைய வலது கையின் கட்டை விரலை எனக்குக் குருதட்சிணையாகக் கொடு!" என்று கேட்டார். உலகிலேயே சிறந்த வில்லாளியாக இருக்க, கட்டை விரல்தான் வில்லின் நாணை உறுதியுடன் இழுக்க மிக முக்கியமான ஆதாரம் என்பது ஏகலைவனுக்குத் தெரியும். கட்டை விரலை இழந்தால் அவனது திறமை பாதியாய்க் குறையும். ஆனால், அவன் ஒரு கணமும் யோசிக்கவில்லை. குருவின் ஆணைக்கு முன்னால் தன் சொந்த லட்சியம் அற்பமானது என்று கருதினான். அவன் தன் வாளை எடுத்து, கண்ணில் நீர் வழிய, ஒரு சிறு தயக்கமும் இல்லாமல் தன் வலது கையின் கட்டை விரலை வெட்டி, குருவின் காலடியில் காணிக்கையாகச் சமர்ப்பித்தான்.

ஏகலைவனின் குருபக்தி நிலைநாட்டப்பட்டது. ஆனால், அவனது வில்வித்தைக்கான வாய்ப்பு பறிபோனது. துரோணரின் வாக்கு காப்பாற்றப்பட்டது. ஏகலைவனின் இந்தத் தியாகம், மகாபாரதத்தில் குருபக்தியின் உச்சமாகவும், அதே நேரத்தில் ஒரு குருவின் கடமை மற்றும் சமூக நீதி குறித்த ஆழமான தார்மீக விவாதமாகவும் இன்றும் பேசப்படுகிறது.

# குறும்பட போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தை பெற்றது யாழ் இந்துக் கல்லூரி.




சுற்றாடல் அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியான குறும்பட போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியின் Dying Drops எனும் குறும்படம் முதலிடத்தை பெற்றது. விருதுவழங்கல் நிகழ்வு சுற்றாடல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் (15.12.2025) நடைபெற்றது. சுற்றாடல் அமைச்சர் வைத்திய கலாநிதி தம்மிக்க பட்டபெந்தி அவர்கள் விருதினை வழங்கிவைத்தார்.

முறையே அடுத்த இடங்ளை St. Lawrence's Convent> Colombo மற்றும் St. Peter's College> Colombo என்பன பெற்றுக்கொண்டன.




குறும்படத்தயாரிப்பில் ஈடுபட்ட மாணவர்களான கிருபாகரன் திவாகரன், சதீஸ்குமரன் சசாங்கன், விக்னேஸ்வரன் விசாகன், விஜயரட்ணம் ஹரிஷ்விஜய் ஆகியோரையும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் மற்றும் அதிபரையும் வாழ்த்துகிறோம்.



# பிரபல பாடகர் வாகீசனுக்கு இணுவிலில் உற்சாக வரவேற்பும் கௌரவிப்பும்



"கடம்பா முருகா கதிர்வேல் அழகா" என்ற சந்த இசையில் அமைந்த பாடலின் மூலம் உலகெங்கும் உள்ள தமிழர்களைத் தன் வசப்படுத்திய பிரபல பாடகர் வாகீசன் (அருள்பரன் வாகீஸ்பரன்), அவரது பிறந்த மண்ணான இணுவிலில் வைத்து அண்மையில் மிகச் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார். முருகன் மீதான இவரது அந்தப் பாடல் தமிழ்நாடு, கேரளா உட்படப் பல தென்னக மாநிலங்களில் வைரலாகி, சந்த இசையின் அடுத்த கட்டப் பரிணாமத்திற்கு இவரை இட்டுச் சென்றது. தமிழகத்தின் முன்னணித் தொலைக்காட்சியான சன் டிவியின் 'டொப் குக் டூப் குக்' என்ற நிகழ்ச்சியில் பங்குபற்றி ஈழத்துத் தமிழ் உலகுக்குப் பெருமை சேர்த்ததுடன், 'ஸ்டார் ஆ.்.ப் ரிசிடிசி' தொலைக்காட்சி விருதினையும் இவர் ஏற்கனவே வென்றிருந்தார்.

கலையின் விளைநிலமாகப் போற்றப்படும் இணுவில் கிராமத்தின் மைந்தனான இவரைக் கௌரவிக்கும் முகமாக, கடந்த சனிக்கிழமை (20.12.2025) மாலை இணுவில் கலைச் சமூகத்தினரால் இணுவில் அறிவாலயத்தில் பாராட்டு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். இதன்போது வாகீசனின் கலைத் திறமைகளையும், அவர் ஈழ மண்ணிற்குப் பெற்றுத் தந்த புகழையும் பாராட்டிப் பேசிய கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள், அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு தனது ஆசிகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் ஊர் பிரமுகர்கள், கலை ஆர்வலர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு பாடகர் வாகீசனை வாழ்த்தி கௌரவித்தனர்.







# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பு



வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் செயற்றிறன் மிக்கதொரு பாடசாலையாக மல்லாகத்தில் அமைந்துள்ள கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் விளங்கி வருகிறது. இந்தப் பாடசாலை மாணவர்க ளின் கற்றல் செயற்பாட்டுக்கு மிகவும் தேவையான திறன்பலகை ஒன்றை அனைத்துலக மருத்துவ நல அமைப்பு வழங்கியதுடன் ஆசிரியர்களுக்கான பயிற்சியையும் ஒழுங்குபடுத்தியது.

திறன்பலகைக் கற்றல் நிகழ்வு சம்பிர தாய முறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பாடசாலை அதிபர், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன், இணைப்பாளர் துஷாந்தன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர்.

கலாநிதி ஆறுதிருமுருகன் தனது ஆசியுரையில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் ரட்ணம் நிதியம் ஆகிய நலநோன்பு நிறுவனங்களின் அளப்பரிய சேவையைப் பாராட்டினார். சிறப்பாக இந்தப் பாடசாலைக்குத் திறன்பலகையை வழங்கியுள்ள டாக்டர் ஈஸ்வரன் வேலாயுதபிள்ளை கொடைக்கு நன்றியும் கூறினார்.

தொடர்ந்து அதிபரின் உரையுடன் ஆசிரியர்கள், மாணவர்களுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டனர். மாணவர்களின் உற்சாகமான கற்றல் இந்தத் திறன் வகுப்பறையின் நோக் கத்தை நிறைவு செய்வதாக அமைந்தது. அனைத்துலக மருத்துவநல அமைப்பு பிரதிநிதியின் கற்றல் செயற்பாடு பற்றிய விவரமான ஆலோசனையுடன் விழா நிறைவுற்றது.






# சகலகலாவித்தகி திருமதி. கோகிலா மகேந்திரனின் பவளவிழா சிறப்பாக நடைபெற்றது



கலாபூஷணம் கோகிலா மகேந்திரன் அவர்களின் பவளவிழா நிகழ்வுகள் 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் வீதி (ராஜா கிறீம் ஹவுஸ்) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.மகாஜனாக் கல்லூ ரியின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து வைத்தியர் சிவரதி கேதீஸ்வரன் அவர்களின் தமிழ் வாழ்த்துடனும் ஆரம்பமானது. இராஜி கெங்காதரன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து வீணை, வயலின் இசை செவிக்கு விருந்தாக அமைந்திருந்தது.

ஆசியுரையினை கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும், கவி வாழ்த்தினை கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களும், வாழ்த்துரையினை காணொலி தொழிநுட்பம் ஊடாக ஆளுநர் நா. வேதநாயகன் அவர்களும், தொடக்கவுரையினை பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் வழங்கினர். தொடர்ந்து பவளவிழா நூலினை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா அவர்கள் வெளியிட பேராசிரியர் க. சிவபாலன் அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன. நூல் அறிமுகவுரையினை பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் நிகழ்த்தினார்.



அதனைத் தொடர்ந்து கோகிலா மகேந்திரன் அம்மையாரின் மாணவ உறவுகளால் “போலச் செய்தல்” நடிப்பு அளிக்கையும் இடம்பெற்றது.உன்னத ஆளுமையாளராக கோகிலா மகேந்திரன் அவர்கள் பெரிதும் வெளிப்படுவது கல்வியலாளராகவே, எழுத்தாளராகவே, உளவியலாளராகவே, நாடக வல்லுநராகவே எனும் பட்டி மண்டபம் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்றது.



குறித்த பட்டிமன்றத்தில் பங்கேற்ற விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் பவளவிழா நாயகியின் பன்முகத்தன்மையான பக்கங்களை சிறப்பாக எடுத்துக்கூறினர்.

தொடர்ந்து சோலைக்குயில் மாணவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற வான்விளிம்பில் ஒரு நட்சத்திரம் எனும் நாடகம் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்திருந்தது. தொடர்ந்து கோகிலா மகேந்திரன் அவர்களுக்கு புனிதவதி சண்முகலிங்கன் அவர்கள் கௌரவம் செய்ததனைத் தொடர்ந்து கணவரான மகேந்திரராஜா அவர்களை பொது வைத்திய நிபுணர் த. பேரானந்தராஜா அவர்கள் கௌரவம் செய்தார்.இறுதியாக பவளவிழா நாயகியின் ஏற்புரையுடனும், வைத்தியர் சிவரூபி அவர்களின் நன்றியுரையுடனும் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றன.

இந்நிகழ்வுக்கு எழுத்தாளர்கள், உளவளத்துணையாளர்கள், கல்வியலாளர்கள், வாசகர்கள், மாணவர்கள் பங்கேற்புடன் அரங்கம் நிறைந்த நிகழ்வாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

